# 17-04-2024 செய்தி

## 18வது மக்களவைத் தேர்தல்

- நாட்டின் 36 மாநிலங்கள் /யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 543 மக்களவைப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க இத்தேர்தல் நடைபெறுகிறது.
- மக்களவையுடன் சேர்த்து ஆந்திரம், அருணாசல பிரதேசம், ஒடிசா, சிக்கிம் ஆகிய 4 மாநில சட்டப்பேரவைக்குத் தேர்தலும் 16 மாநிலங்களில் 35 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு இடைத்தேர்தலும் நடைபெறுகிறது.
- இத்தேர்தலில் 96.8 கோடி பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். 85 லட்சம் பெண்கள் உள்பட 1.8 கோடி பேர் முதல் முறை வாக்காளர்கள் ஆவர்.
- 12 மாநிலங்களில் ஆண் வாக்காளரைவிட பெண் வாக்காளர்கள் அதிகம் உள்ளனர்.
- 85 வயதுக்கும் மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் படிவம் 12டி-யின் மூலம் வீட்டிலிருந்தே வாக்களிக்கும் நடைமுறை முதல்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ஏப்ரல் 19 ஜீன் 1-ஆம் தேதி வரை 7 கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது.
- தேர்தலில் பதிவான வாக்குகள் ஜீன் 4-ஆம் தேதி எண்ணப்படுகின்றன. அருணாசல பிரதேசம், சிக்கிம் மாநிலங்களுக்கான வாக்கு எண்ணிக்கை ஜீன் 2-ஆம் தேதி நடைபெறுகிறது. அவ்விரு மாநில சட்டப்பேரவைகளின் பதவிக்காலம் ஜீன் 2-ஆம் தேதி முடிவுக்கு வருவதால், தேர்தல் நடவடிக்கைகள் அன்றே நிறைவடைய வேண்டும் என்பதால் அங்க முன்கூட்டியே வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

## பாரிஸ் ஒலிம்பிக்

- 33-ஆவது ஒலிம்பிக் போட்டிகள், பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் நடப்பாண்டு ஜீலை 26 முதல் ஆகஸ்ட் 11-ஆம் தேதி வரை 19 நாள்கள் நடைபெறவுள்ளன.
- கிரேக்க கடவுள் ஸீயஸின் மனைவி ஹெராவின் கோவில் வளாகத்தில் பாரம்பரிய முறைப்படி இந்நிகழ்ச்சி அரங்கேறியது. பண்டைய கிரேக்க மத குரு வேடமிட்ட நடிகை, கிரேக்க சூரியக் கடவுளான அப்போலோவை வழிபட்டு, அதன் பின்னர் தீபமேற்றினார்.
- வழக்கமாக, பரவளையக் கண்ணாடி அமைப்பு வைக்கப்பட்டு, அதில் குவியும் சூரிய ஒளியின் வெப்பத்தைக் கொண்டு பாரம்பரியமான வெள்ளி டார்ச்சில் தீபம் உருவாக்கப்படும்.
- மாற்று ஏற்பாடான கிரேக்க முறையில் வடிவமைக்கப்பட்ட சிறிய பாத்திரத்தில் நெருப்பு வைக்கப்பட்டிருந்தது.
- தலைமை மத குருவாக நடித்தவர், அதிலிருந்தே டார்ச்சில் தீபத்தை பற்றவைத்தார்.
- அவரிடம் இருந்து முதலில், கிரீஸ் துடுப்புப் படகு வீரர் ஸ்டெஃபனோஸ் டுஸ்கோஸ், பாரீஸ் ஒலிம்பிக்கிற்கென உருவாக்கப்பட்ட டார்ச்சில் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றிக்கொண்டு, வெற்றியின் அடையாளமாக கருதப்படும் ஆலிவ் செடியையும் பெற்றுக் கொண்டு தீப ஓட்டத்தை தொடங்கினார்.
- அவரிடம் பிரான்ஸ் நீச்சல் வீராங்கனை லாரெ மனாடுவும், பிறகு அவரிடமிருந்து கிரீஸை சேர்ந்த மூத்த ஐரோப்பிய யூனியன் அதிகாரியான மார்கரிடிஸ் ஷினாஸீம் பெற்றுக் கொண்டு தீப ஓட்டத்தில் ஈடுபட்டனர்.
- இந்த தீப ஓட்டமானது, கிரீஸில் சுமார் 5,000கி.மீ. பயணித்து, நவீன ஒலிம்பிக்ஸ் தொடங்கிய (1896) ஏதென்ஸ் நகரில் வரும் 26-ஆம் தேதி பாரீஸ் ஒலிம்பிக் ஒருங்கிணைப்பாளர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.
- அங்கிருந்து பிரான்ஸ் முழுவதுமாக 68 நாள்கள், 65 பிராந்தியங்களில்இ 66 நகரங்களில் பயணித்து ஜீலை 26-ஆம் தேதி போட்டி தொடக்க நாளில் பாரீஸ் வருகிறது. இடையே கடல் பரப்புகளிலும் அந்த டார்ச்ச பயணிக்கவுள்ளது.
- அதை மொத்தமாக சுமார் 11,000 பேர் தங்கள் கையில் ஏந்தி தீப ஓட்டத்தில் கலந்துகொள்ள இருக்கின்றனர்.